திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, இது இவ்வளவு லாபம் கொடுத்திருப்பதால் இந்த லாபமெல்லாம் சிறுகூட்டுறவுச் சங்கத்தினுல் பெறப்பட்டது. எனவே அவர்களுக்குக் கடன் கொடுப்பதிலே வட்டி விகிதத்தைக் குறைத்துக்கொடுக்க அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி லாபம் கிடைப்பதால் அதிலே யார் யார் பங்குதாரர்களாக இருக்கிறர்களோ அவர்களுக்குப் பயன் கிடைக்கும், பணம் போட்டவர்களுக்குப் பயன் கிடைக்கும். வட்டியைப் பொறுத்தவரையில் அபெக்ஸ் சொஸைட்டியை பேங்காக ரிசர்வ் பேங்க் ஒத்துக்கொண்டால் வட்டியைக் குறைப்பதைப்பற்றி ஒத்துக்கொள்ளலாம்.

பாக்கம் மலையில் கனிப்பொருள்கள்

* 329 வின—திரு. ரா. ரா. முனுசாமி : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செஞ்சி வட்டத்தில் உள்ள பாக்கம் மலையில் கனிப் பொருள்கள் இருப்பதாக அரசுக்குத் தகவல் ஏதேனும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில் அங்கு ஆராய்ச்சி நடத்தி கனிப்பொருள்கள் எடுக்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் :

(அ) இல்லை.

(இ) வின எழவில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி: தலைவரவர்களே, முன்னுள் அரசாங்கம் செஞ்சி வட்டத்தில் உள்ள பாக்கம் மலையில் 1956-இல் ஜப்பானிலிருந்து ஆராய்ச்சிக் குழுவினர் வந்து ஆராய்ச்சி நடத்தினர்கள் என்று முன்னுள் அரசாங்கத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்தவர்கள் சொல்கிறர்கள், அந்தத் தன்மையைப் போல் ஆராய்ச்சி நடத்தப்பட்டதா, இல்லையென்றுல் ஜப்பானி லிருந்து குழுவை வரவழைத்து ஆராய்ச்சி செய்ய அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தப் பகுதியிலே ஆராய்ச்சி நடத்தப்பட்டது. அதிலே பாக்கம் குன்றிலே (Granite dolerite) கிடைப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

*Mineral deposits near Palani*

* 330 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether minerals for the fabrication of special steel have been struck near Palani by the Geological Survey of India; and

(b) if so, the details thereof?